DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.9**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கணேசன் |
| Father Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2025.

(1, 2, 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி இறந்துவிட்டார். )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது நேதாஜி ரோட்டில் கேமரா சர்வீஸ் செய்யும் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2016 ம் ஆண்டில், தேதி மாதம் ஞாபகமில்லை, ஒரு நாள் ஒரு போலிஸ்காரர் சேதமடைந்த கேமராவை கொண்டு வந்திருந்தார். நான் அதை பார்த்துவிட்டு அதற்கு ரூ.6,000/-ற்கு சேதமதிப்பு வழங்கினேன். அந்த சேத மதிப்பு சான்று என்னிடம் காட்டப்படுவது தான், அந்த சேதமதிப்பு சான்று **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

பொதுவாக சேதமதிப்பு சான்று வழங்கும் போது தேதி குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். அ.சா.ஆ.4 சேதமதிப்பு சான்றில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய initial "T.K." ஆகும். ஆனால் அ.சா.ஆ.4 சேதமதிப்பு சான்றில் initial "P" என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த கையொப்பம் என்னுடையது அல்ல. என்னுடைய கேமரா சர்வீஸ் சென்டர் திடீர் நகர் காவல் நிலைய எல்கைக்குட்டுள்ளது. திடீர் நகர் காவல் நிலையத்திலிருந்து கேட்டுக்கொண்டதால் நான் ஆவணங்களை தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2, 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2, 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்களால் தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –** இல்லை.